தகவல் ஏடு

# My Health Record

## ‘என் சுகாதாரப் பதிவு' (My Health Record) என்பது என்ன?

‘என் சுகாதாரப் பதிவு' (My Health Record) என்பது உங்களுடைய முக்கியமான உடல்நலத் தகவல்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கான ஒரு இடமாகும். உங்களுடைய பதிவு உங்களுக்கும், உங்களுடைய சுகாதார சேவை வழங்குநர்களுக்கும், உங்களுடைய பிரதிநிதிகளுக்கும் எவ்வேளையிலும் கிடைக்கும். அவசர நிலை ஒன்று இதில் உள்ளடங்கும்.

## ‘என் சுகாதாரப் பதி'(My Health Record)வை நான் ஏன் பயன்படுத்த வேண்டும்?

- உங்களுடைய சுகாதாரத் தகவல்களை உங்களால் ஒரே இடத்தில் அணுகிப் பெற இயலும்.
- காலப் போக்கில் உங்களுடைய உடல்நலத்தைப் பற்றிய விரிவானதொரு கண்ணோட்டத்தை இதனால் கொடுக்க இயலும்.
- உங்களுடைய மருத்துவ வரலாற்றினை மீண்டும் சொல்ல வேண்டிய தேவை உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம்.
- அவசியமற்ற சோதனைகள் மற்றும் ‘ஸ்கேன்’களைத் தவிர்க்க இது உதவக்கூடும்.
- இன்னும் நல்ல சுகாதாரப் பராமரிப்பு அனுபவங்களும், பலன்களும் உங்களுக்குக் கிடைக்க இது உதவலாம்.
- அவசர நிலை ஒன்றில் உங்களைப் பற்றிய தகவல்களைப் பெறலாம்.
- உங்களுடைய பதிவு எப்பொழுதும் உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கும்.

## ‘என் சுகாதாரப் பதி'(My Health Record)வில் என்ன இருக்கும்?

உங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்குநர்களிடமிருந்து வந்த மருத்துவ ஆவணங்கள் உங்களுடைய பதிவில் இருக்கும். சோதனை முடிவுகள், மருந்துகள் மற்றும் ஒவ்வாமை குறித்த தகவல்கள் மற்றும் தடுப்பூசியேற்றப் பதிவுகள் ஆகியன இதில் உள்ளடங்கலாம். நீங்கள் விரும்பினால், உங்களுடைய ‘மெடிகெயர்' ஆவணங்களும் இதில் சேர்க்கப்படலாம். உங்களுடைய சொந்த உடல்நலனைப் பற்றிய குறிப்புகளையும் நீங்கள் சேர்க்கலாம்.

## 'என் சுகாதாரப் பதி'(My Health Record)வை நான் எவ்வாறு அணுகிப் பெறலாம்?

கணினி அல்லது மொபைல் சாதனம் ஒன்றைப் பாவித்து 'என் சுகாதாரப் பதி'(My Health Record)வை நீங்கள் அணுகிப் பெறலாம். முதலில், 'மை-கவ்' (myGov) கணக்கு ஒன்று உங்களுக்குத் தேவைப்படும். 'என் சுகாதாரப் பதி'(My Health Record)வை அணுகிப் பெறுவதற்கான பாதுகாப்பானதொரு வழியாகும் 'மை-கவ்' (myGov). அடுத்ததாக, உங்களுடைய 'என் சுகாதாரப் பதி'(My Health Record)வை நீங்கள் உங்களுடைய 'மை-கவ்' (myGov) -உடன் இணைக்க வேண்டியிருக்கும். உங்களுடைய பதிவ நீங்கள் ஒரு முறை ஏற்படுத்திக்கொண்ட பிறகு '**மை ஹெல்த்** செயலி' (**my health** app)-யைப் பயன்படுத்தி கணினி அல்லது மொபைல் சாதனம் ஒன்றில் உங்களுடைய 'என் சுகாதாரப் பதி'(My Health Record)வை நீங்கள் பார்வையிடலாம்.

## என்னுடைய பதிவினை யாரால் அணுக இயலும்?

பெரும்பான்மையான தருணங்களில், சுகாதார சேவைகளை வழங்குவதற்காக **சுகாதார சேவை வழங்குநர்கள்** உங்களுடைய பதிவினை அணுகிப் பெற அனுமதிக்கப்படுவர். இருப்பினும், நீங்கள் விரும்பினால், சுகாதார சேவை வழங்குநர்களுக்கு உள்ள உங்களுடைய பதிவினை அணுகிப் பெறும் வசதியை நீங்கள் கட்டுப்படுத்தலாம்.

உங்களுடைய நம்பிக்கைக்கு உரிய ஒருவரை நீங்கள் உங்களுடைய '**நியமிக்கப்பட்ட பிரதிநிதி**'(**nominated representative**)யாக செயல்படுமாறு கேட்கலாம். குடும்ப அங்கத்தவர், நெருங்கிய நண்பர் அல்லது பராமரிப்பாளர் ஒருவராக இவர் இருக்கலாம். உங்களது நியமிக்கப்பட்ட பிரதிநிதியால் உங்களுடைய பதிவினைப் பார்வையிட இயலும். அதை நிர்வகிக்கவும் அவரால் உங்களுக்கு உதவ இயலும். உங்களுடைய நியமிக்கப்பட்ட பிரதிநிதிக்கு இருக்கும் அணுகல் வசதியின் அளவை நீங்கள் நிர்ணயம் செய்யலாம், மற்றும் அதை எவ்வேளையிலும் புதுப்பிக்கலாம்.

'**அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிரதிநிதி**' (**authorised representative**) ஒருவருக்கு அவரைச் சார்ந்திருப்போரது 'என் சுகாதாரப் பதி'(My Health Record)வை முற்றிலும் அணுகிப் பெறுவதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான வசதி இருக்கும். மற்றோரைச் சார்ந்திருக்கும் நபர் என்பவர்:

- 14 ஆண்டுகளுக்குக் கீழ்ப்பட்ட வயதுடையவர், அல்லது
- தமக்கான முடிவுகளைத் தாமே மேற்கொள்ள இயலாமல் இருக்கும் 14 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வயதுடைய ஒருவர்.

## கூடுதல் மூலவளங்கள்

‘என் சுகாதாரப் பதிவு' (My Health Record) வலைப்பக்கம்
www.digitalhealth.gov.au/my-health-record

‘என் சுகாதாரப் பதிவு' (My Health Record) இணையவழிக் கல்வி
https://training.digitalhealth.gov.au/mod/page/view.php?id=960

‘என் சுகாதாரப் பதிவு' (My Health Record) ஆதரவுதவி

‘என் சுகாதாரப் பதிவு' (My Health Record) உதவித் தொலைபேசி இணைப்பு
1800 723 471 (தெரிவு 1), நாளுக்கு 24 மணி நேரமும் வாரம் 7 நாட்களும் கிடைக்கும்.

‘ஆஸ்திரேலிய டிஜிட்டல் ஹெல்த் ஏஜென்சி’ தொடர்புப் படிவம்:
www.digitalhealth.gov.au/contact-us

‘மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை
’131 450
www.tisnational.gov.au/Help-using-TIS-National-services/Contact-TIS-National

‘நேஷனல் ரிலே சர்வீஸ்’
1300 555 727
www.accesshub.gov.au